**II - ஆம் வகுப்பு** **தமிழ்** 11 0 0 7 9

காலம் : - 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**I அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :-** 14 X 1 = 14

1. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) அ. முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு. வில்வரத்தினம் - ஆறாம் திணை ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதைமொழியும்
1) அ. ஆ 2) அ. ஈ 3) ஆ. ஈ 4) அ. இ
2. மண்ணுக்கு வளம் சேர்ப்பன ....
அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
3. உடம்படு மெய்கள் யாவை? ................ . அ) ய். ம் ஆ) ம். வ் இ) ய். வ் ஈ) ப். ம்
4. பாயிரம் இல்லது ........... அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
5. தமிழகத்தின் மாநில மரம் எது? அ) தென்னை மரம் ஆ) வேப்பமரம் இ) பனைமரம் ஈ) ஆலமரம்
6. 'பள்ளு' என்ற இலக்கிய வடிவத்தின் வேறு பெயர் ............... .
அ) கவிப்பாட்டு ஆ) இயற்கைப்பாட்டு இ) வயல்பாட்டு ஈ) உழத்திப்பாட்டு
7. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
8. "சேயோன் மேய மைவரை உலகம்" என்று உரைக்கும் நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) நம்பியகப்பொருள்
9. பகுதி விகுதி இடைநிலை ஆகியவை புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் ........ எனப்படும். அ) சாரியை ஆ) சந்தி இ) விகாரம் ஈ) புணர்ச்சி
10. நிழல்போலத் தொடர்ந்தான்.... இது எவ்வகை உவமை? அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
11. பள்ளியிறுதி வகுப்பு - மாநில அளவிலான பொதுத்தேர்வு நடைமுறைக்கு வந்த ஆண்டு .......... .
அ) 1911 ஆ) 1910 இ) 1835 ஈ) 1854
12. *பொருத்துக :-*

| | | |
|---|---|---|
| அ) தொல்காப்பியம் | - | i) சங்கநூல் |
| ஆ) திருக்குறள் | - | ii) பக்தி நூல் |
| இ) புறநானூறு | - | iii) அறநூல் |
| ஈ) திருவாசகம் | - | iv) இலக்கண நூல் |

அ) iv. iii. ii. i ஆ) iv. iii. i. ii இ) iv. ii. iii. i ஈ) i. ii. iii. iv
13. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது?
அ) காய்முன் நேர் ஆ) காய்முன் நிரை இ) கனிமுன் நிரை ஈ) மாமுன் நேர்
14. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது? அ) மொழிபெயர்ப்பாளர்
ஆ) இந்தியாவின் பெப்பிசு இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

**II பிரிவு - 1 எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :-** 3 X 2 = 6

15. பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?
16. தொழு உரம் என்றால் என்ன?
17. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
18. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

**பிரிவு -2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :-** 2 X 2 = 4

19. காவடிச்சிந்து என்பது யாது?
20. உவமை - உருவகம் வேறுபடுத்துக.
21. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

**பிரிவு - 2 எவையேனும் ஏழனுக்கு விடை தருக :-** 7 X 2 = 14

22. *பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.* அ) பந்து ஆ) நிச்சயம்
23. அன்று, அல்ல என்பவற்றுக்கான பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.

kumbakonam

www.padasalai.Net

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
தேர்வெழுத வேகமாப் போங்க, நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. உலை, உளை, உழை
26. இலக்கணக் குறிப்பு தருக. அ) கெடுக ஆ) குறிப்புணர்வார்
27. ஏதேனும்ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) மலிந்த ஆ) வைத்தார்
28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) புகழெனின் ஆ) இழுக்கின்றி
29. கலைச்சொல்லாக்கம் தருக? அ) Backwater ஆ) Harvesting
30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்

III பிரிவு - 1 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :- 2 X 4 = 8
31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. மொழி முதல் இறுதி எழுத்துகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தருக.
33. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.
34. புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்களைக் குறிப்பிடுக.

பிரிவு - 2 எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக :- 2 X 4 = 8
35. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.
36. உள்ளுறை உவமை, இறைச்சி - எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
37. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்துள் எவையேனும் நான்கினைக் கூறுக.
38. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

பிரிவு - 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக :- 3 X 4 = 12
39. வேற்றுமை அணி *(அல்லது)* உருவக அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக. மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன் ;
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர். *- பாரதியார்.*

41. அ) பொதுவியல் திணையைச் சான்றுடன் விளக்குக. *(அல்லது)*
ஆ) பொருண் மொழிக்காஞ்சித் துறையைச் சான்றுடன் விளக்குக.
42. மொழியை வாழ்க்கை நிகழ்வுடன் ஒப்பிட்டு எழுதுக.
அ) நுணலும் தன் வாயால் கெடும். *(அல்லது)* ஆ) குறைகுடம் கூத்தாடும்
43. கல்வி *(அல்லது)* நட்பு என்னும் தலைப்பில் கவிதை புனைக.

IV அனைத்து வினாக்களுக்கும் விடை தருக :- 3 X 6 = 18
44. அ) நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க. *(அல்லது)* ஆ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.
45. அ) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.
ஆ) அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.
46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? ஆ) மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப்புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

V அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக :- 4 + 2 = 6
47. அ) 'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'பகை' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



Kindly Send me your district Questions & Keys to email id - Padasalai.net@gmail.com